**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**அசல் வழக்கு எண். 90/2023**

**வா.சா.4**

நாள்: **19.09.2024**

2024ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய திரு.விஸ்வநாதன் என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி திரு. எஸ். குமரகுரு, பி.எல்., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஸ்வநாதன் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

<u>முதன்மை விசாரணை:</u>

நான் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் அழைப்பாணையில் சொல்லப்பட்டு கிரைய ஆவணத்தின் அசலை நான் கொண்டுவரவில்லை. மேற்படி சொத்தினை நான் விற்பனை செய்துவிட்டேன். நான் கிரையம் பெற்ற அந்த சொத்தின் கிரைய ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் என்னிடம் காட்டப்படுவதுதான். அந்த கிரைய ஆவண சான்றிட்ட நகல் வா.சா.ஆ.13 ஆகும்.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. நான் யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்று எனக்கு தெரியுமா

என்றால் நான் வாங்கி 20 வருடம் ஆனதால் எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பாக  கிரைய ஒப்பந்த சொத்தை பொறுத்து வில்லங்கம் போட்டு பார்த்து வாங்கினேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் கிரையம் வாங்கிய சொத்து எனக்கு கிரையம் கொடுத்தவருக்கு எப்படி பாத்தியம் என்று சொல்ல முடியுமா என்றால் நான் ஏஜெண்ட் மூலமாக வாங்கியதால் அதை நான் தெரிந்து கொள்ளவில்லை. நான் கடன் அதிகம் வாங்கிவிட்டதால் அதை திருப்பி செலுத்த வேண்டும் என்பதால், நான் என்னுடைய நிலத்தை எனது நண்பருடைய நண்பர் தெரிந்த நபர் என்பதால் கொடுத்தேன். இன்றைய தேதியில் கிரைய பத்திர சொத்தினை பொறுத்து சரியாக சொல்ல இயலாது என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .